# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.

| S.நாகராஜன் | K.சந்திரசேகரன்,B.A | B.தியாகராஜன், M.Com., |
|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


**சுற்றறிக்கை எண் : 05/2019** நாள்: 30-05-2019

அன்புகெழுமிய சங்க உடன் பிறப்புகளுக்கு பொதுச்செயலாளரின் வாழ்த்துக்கள். 30-04-2019 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 04/2019ன் தொடர்ச்சியாக கீழ்கண்ட விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

**I.இயக்க நடவடிக்கைகள்:**

சங்கத்தின் தர்மபுரிவட்ட மாநாட்டிற்காக நன்கொடை வசூலித்தார் என்பதற்காக திருவாளர் விஜயராகவனால் 1986ம் ஆண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டு சங்கத்தின் சட்டப் போராட்டத்தின் காரணமாக மீண்டும் 31-03-1995 அன்று வாரியப்பணியில் சேர்ந்து தனது வாழ்நாள் இறுதிவரை சங்க மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு 28-04-2019 அன்று மறைந்த அரூர் திரு.M.இராஜு அவர்களுக்கு கடந்த 05-05-2019 அன்று நினைவேந்தல் கூட்டமும் அவரின் படத்திறப்பும் மற்றும் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் பெரியவர் அமரர் திரு.ச.வெ.அங்கப்பன் அவர்களின் படத்திறப்பு நிகழ்வும் தர்மபுரி மத்திய அலுவலக வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தலைவர், துணைத்தலைவர்கள் திரு.P.அன்பழகன், திரு.S.அபுத்தாயர், நிதிச்செயலாளர், அமைப்புச்செயலாளர், உதவிப்பொதுச்செயலாளர், பொதுச்செயலாளர் ஆகியவர்களுடன் தர்மபுரி, மேட்டூர், சேலம், நாமக்கல் ஆகிய வட்டங்களின் முன்னாள் இன்னாள் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்குவட்டத்தின் சார்பில் அம்பத்தூர் செயற்பொறியாளர் அலுவலக நுழைவாயிலில் 07-05-2019 அன்று மாலை மேதின விழாக்கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுச்செயலாளரோடு இணைச்செயலாளர் திரு.N.கணேசன், உதவிப்பொதுச்செயலாளர், எண்ணூர், வடசென்னை வட்டச்செயலாளர்கள், சென்னை தெற்கு வட்டஅமைப்பாளர்கள் மற்றும் சென்னை மேற்கு வட்டப்பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தின் துவக்கத்தில் சங்கக் கொடியினை பொதுச்செயலாளர் ஏற்றிட மறைந்த பொதுச்செயலாளர் பெரியவர் திரு.ச.வெ.அங்கப்பன் அவர்களின் படத்தை இணைச்செயலாளர் திரு.N.கணேசன் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

11-05-2019 அன்று திருநெல்வேலி வாரிய வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில், சங்கத்தின் முன்னாள் தலைவர் மறைந்த திரு.தி.மு.வேலாயுதம் அவர்களின் திருஉருவப்படத்தை முன்னாள் இணைச்செயலாளர் நெல்லை திரு.இராமசாமி அவர்களும் முன்னாள் பொதுச்செயலாளர் பெரியவர் திரு.ச.வெ.அங்கப்பன் அவர்களின் திருஉருவப்படத்தை பொதுச்செயலாளரும் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர்.தொடர்ந்து திருநெல்வேலி மண்டலக்குழுவின் விரிவடைந்த மண்டலக்குழுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் நெல்லை வட்டத்தின் முன்னாள் வட்டச்செயலாளர் திரு.பன்னீர்செல்வம் அவர்களும், நெல்லை மண்டலக்குழு உறுப்பினர்களும், தலைவர் அவர்களும், துணைத்தலைவர்கள் திரு.P.அன்பழகன், திரு.S.அபுத்தாயர், நிதிச்செயலாளர், உதவிப்பொதுச்செயலாளர், அமைப்புச்செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

17-02-2019 அன்று உயர்மட்டக்குழுவில் 01-04-2003க்கு முன் மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளியாக பணியில் சேர்ந்து அதற்குப்பின் நிரந்தரப்படுத்தப்பட்டவர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பலன்பெற மேற்கொள்ளப்படவேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட முடிவுகளையும், ஏனைய இயக்க நடவடிக்கைகளையும் உள்ளடக்கி 28-02-2019 தேதிய சுற்றறிக்கை எண்:2/2019 வாயிலாக பொதுச்செயலாளர் தெரிவித்திட்ட கருத்துக்களையும்

கொச்சைபடுத்தி வாட்ஸ்அப் மூலம் செய்திகளை பதிவு செய்த பெரம்பலூர் வட்ட மத்தியஅலுவலக கிளை உறுப்பினரும், மத்தியஅலுவலக கிளைச்செயலாளர் மற்றும் வட்டத்தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்துவந்தவருமான திரு.L.இளையராஜா அவர்கள் மீது அவரது சங்கக்கட்டுப்பாட்டை மீறிய நடவடிக்கை, உயர்மட்டக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு, பொதுச்செயலாளரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை கொச்சைப்படுத்தி விமர்சித்தது ஆகியவை குறித்து கோவை மண்டலத்தின் உதவி மண்டலச்செயலாளர் திரு.V.இராமமூர்த்தி அவர்கள் அளித்தபுகாரினை இணைத்து திரு.L.இளையராஜா அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. திரு.L.இளையராஜா அவர்கள் நேரடியாக தனது விளக்கத்தை அளித்திடாமல் ஒருவழக்கறிஞர் மூலம் பதில் அறிக்கை ஒன்றினை அளித்து வழக்கறிஞர் தனது கட்சிக்காரர் மீது நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டால் அதனை சட்டபூர்வமாக சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார். இப்பிரச்சனை குறித்து சங்கத்தலைவர் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகுழு ஆகியோரின் கருத்தை கேட்டறிந்து அவர்களின் பரிந்துரைபடி திரு.L.இளையராஜா அவர்கள் சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் மற்றும் அவர் வகித்து வரும் பொறுப்புகளிலிருந்து சங்க துணைவிதி 7(111)ன்படி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மற்றபடி பொது நலநிதி உறுப்பினர்களுக்கு உதவி தொகை அளிப்பது அவற்றிற்காக பொதுநலநிதியின் நிதி ஆதாரத்தை மேம்படுத்துவது ஆகியவை குறித்து ஆய்வு செய்து முடிவுகள் எடுத்திட பொது நலநிதியின் துணைக்குழுக்கூட்டம் எதிர்வரும் 08-06-2019 அன்றும், தீர்வுகாணப்பட வேண்டிய பிரச்சனைகளில் தீர்வு காண மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இயக்க நடவடிக்கைகள் குறித்து முடிவுகள் எடுத்திட சங்கத்தின் உயர்மட்டக்குழு எதிர்வரும் 09-06-2019 அன்றும் சென்னையில் நடைபெறஉள்ளது.

## **<u>II. வாரிய ஆணைகள் மற்றும் பதவி உயர்வு செய்திகள்:-</u>**

வாரிய ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் 01-01-2019 முதல் 3% அகவிலைப்படி உயர்வுக்கான வாரிய ஆணைகள் முறையே எண்:63 நாள்:22-05-2019 மற்றும் எண்:64 நாள் 22-05-2019 வாயிலாக பிறப்பிக்கப்பட்டுள்ளது. இம்மாத ஊதியம் மற்றும் ஓய்வூதியத்துடன் 5/2019ம் மாதத்திற்கான உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கப்படும். 1/2019லிருந்து 4/2019 வரையிலான மாதங்களுக்குரிய நிலுவைத்தொகை எதிர்வரும் 15-06-2019 அன்று வழங்கப்பட உள்ளது.

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் காரணமாக தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பதவி உயர்வுகள், ஊர்மாறுதல் நியமனங்கள், வட்ட ஒதுக்கீடு மாற்றம் போன்றவைகளை வழங்கிட தலைமைப்பொறியார் பணிஅமைப்பு அவர்களிடம் வற்புறுத்தியுள்ளோம். இந்தப்பணிகள் நிர்வாகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முகவர் முதல்நிலை பொறுப்பிலிருந்து, சிறப்புநிலை முகவர் பொறுப்பிற்கு வழங்கப்பட்ட பதவி உயர்வினை தற்காலிகமாக துறந்தவர்களுக்கு மீண்டும் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்ற நமது கோரிக்கையின் மீது உத்திரவுகள் வழங்கிட வாரிய நிர்வாகம் கடித எண்:073010/526/ஜி46/ஜி462/2019 நாள்:09-05-2019 வாயிலாக சில விபரங்களை மேற்பார்வைப்பொறியாளர்களிடம் கேட்டுள்ளது. கேட்கப்பட்ட விபரங்களை விரைவில் அனுப்பிவைத்திட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

கணக்குப்பிரிவில் கணக்குமேற்பார்வையாளர் பொறுப்பிலிருந்து உதவிகணக்கு அலுவலர்பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் மீதம்உள்ள 5நபர்களுக்கு பதவிஉயர்வு உத்திரவுகள் வழங்கப்பட உள்ளது.

உதவிகணக்குஅலுவலர் பொறுப்பிலிருந்து கணக்குஅலுவலர் பொறுப்பிற்கு பதவிஉயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் மீதம் உள்ள 21நபர்களில் 8நபர்களுக்கு பதவிஉயர்வு உத்திரவுகள் வழங்கப்பட உள்ளது.

கணக்குஉதவியாளர் பொறுப்பிலிருந்து கணக்கு மேற்பார்வையாளர் பொறுப்பிற்கு பதவிஉயர்வு பட்டியல் அனுமதித்திட C.E.P'S Lr.No:017761/243/G29/G292/2019-1, dt:06-03-2019 வாயிலாக 470நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசிநபர் திரு.D.கரிகாலன் திருவாரூர் மின்பகிர்மான வட்டம்.

கணக்கு அலுவலர் பொறுப்பிலிருந்து துணைநிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவிஉயர்வு பட்டியல் அனுமதித்திட சில நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை முழுமையாக கிடைக்கப்பெறாமையால் பதவிஉயர்வு பட்டியல் அனுமதி தாமதமாகி வருகிறது.

உள்முகத்தேர்வு மூலம் இளநிலை உதவியாளர்(கணக்கு) பொறுப்பிற்கு நியமனம் வழங்கிட சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரையில் நியமனங்களை வழங்கிட வற்புறுத்தியுள்ளோம்.

அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பில் வருவாய் மேற்பார்வையாளர் பொறுப்பிலிருந்து, மதிப்பீட்டுஅலுவலர் பொறுப்பிற்கு பதவிஉயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் மீதம் உள்ள நபர்களுக்கும், மதிப்பீட்டுஅலுவலர் பொறுப்பிலிருந்து முதுநிலைமதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு 10 நபர்களுக்கு பதவிஉயர்வு உத்திரவுகள் வழங்கப்படவுள்ளது.

மதிப்பீட்டாளர் பொறுப்பிலிருந்து மதிப்பீட்டாய்வாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வுபட்டியல் அனுமதித்திட C.E.P'S Lr.No:026947/130/G25/G252/2019-2, dt:03-05-2019 வாயிலாக 1244 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசி நபர் திரு.G.ரவி சென்னை தெற்குவட்டம்.

கேட்கப்பட்டுள்ள தகுதிகாண் அறிக்கையில் பல மதிப்பீட்டாளர் பெயர்கள் விடுபட்டுள்ளதாகவும் முதன்மை(Per)CMD Tanjedco Proceedings No:110 (ADM Branch) dt:25-09-2013ல் வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு புறம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறோம். மேற்கண்ட வாரிய ஆணைபடி ஒப்பந்ததொழிலாளர்களிலிருந்து மதிப்பீட்டாளர்களாக நியமிக்கப்பட்டவர்களின் முதன்மை அவர்கள் ஒப்பந்த தொழிலாளியாக பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவேண்டும். தகுதி காண் அறிக்கையில் இடம் பெற்றுள்ள கடைசி மதிப்பீட்டாளர் ஒப்பந்த தொழிலாளியாக பணியில் சேர்ந்த நாள் 14-02-1996 எனவே மேற்குறிப்பிட்ட நாள் வரை ஒப்பந்த தொழிலாளியாக பணியில் சேர்ந்தவர்கள் பெயர் முதன்மை பட்டியலில் இடம் பெறவேண்டும். பட்டியலில் பெயர் சேர்க்காமல் விடுபட்டவர்களை தலைமைப்பொறியாளர் பணிஅமைப்பு அவர்களுக்கு முறையீடுகளை செய்திட வேண்டுகிறோம்.

நிர்வாகப்பிரிவில் நிர்வாகமேற்பார்வையாளர் பொறுப்பிற்கும், உதவிநிர்வாக அலுவலர் பொறுப்பிற்கும், முதுநிலை நிர்வாகஅலுவலர் பொறுப்பிற்கும் பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட உள்ளது.

நேர்முகத்தேர்வு மூலம் உதவிப்பொறியாளர் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 325 நபர்களுக்கு நியமன உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது. உள்முகத்தேர்வு மூலம் உதவிப்பொறியாளர் பொறுப்பிற்கு 277 நபர்களுக்கு நியமன உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது. இளநிலைப்பொறியாளர் IIம்நிலையிலிருந்து Iநிலைபொறுப்பிற்கு விகிதாச்சார பிரச்சனையில் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் பதவி உயர்வு உத்திரவுகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது. களப்பிரிவு ஊழியர்களிலிருந்து

இளநிலைப்பொறியாளர் IIம்நிலை பொறுப்பிற்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் மீதம் உள்ள சுமார் 50 நபர்களுக்கு பதவிஉயர்வு உத்திரவுகள் விரைவில் வழங்கப்படஉள்ளது.

உள்முகத்தேர்வு மூலம் தொழில்நுட்ப உதவியாளர் பொறுப்பிற்கு நியமனம் கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் உத்திரவுகள் வழங்கப்படும் என நம்புகிறோம்.

## III. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் விபரம்:

1. இளநிலை உதவியாளர் பொறுப்புகள் நியமனத்திற்கு கல்வித்தகுதியை பட்டப்படிப்பு என உயர்த்தியதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கு இன்னும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.
2. தேர்வுநிலை வருவாய் மேற்பார்வையாளர் ஊதிய நிர்ணயம் குறித்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளது.
3. கேங்மேன் நியமனத்திற்கு தடைவிதிக்கக்கோரி மத்திய அமைப்பு, எம்ப்ளாயீஸ் பெடரேசன், தொ.மு.ச.மற்றும் நமது சங்கம் சார்பில் உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஜுன் திங்கள் முதல்வாரத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நம்புகிறோம்.

## IV. பொறுப்பாளர்களுக்கு வேண்டுகோள்:

2019ம் ஆண்டிற்கான சந்தா பெரும்பாலான வட்டங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மத்திய சங்கத்திற்குரிய பங்குத்தொகை அனுப்பப்பட்டு வருகிறது.

சங்கத்துணை விதிகள்படி ஜுன் திங்கள் 30ம் நாளுக்குள் சந்தாவை செலுத்தி மத்திய சங்கத்திலிருந்து உறுப்பினர் அட்டையை பெறாதவர்கள் சங்க உறுப்பினர் என்ற தகுதியை இழந்து விடுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு தாமதமின்றி சந்தாவினை வசூலித்து மத்திய சங்கத்திற்கான பங்குத்தொகையினை செலுத்தி உறுப்பினர் அட்டையினை பெற்றிட நடவடிக்கைஎடுத்திட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

இந்த ஆண்டு ஜனவரி திங்களில் விருப்பமாறுதல் கோரி ஊழியர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் 30-06-2019 உடன் காலாவதி ஆகிவிடும் என்பதால் தலைமைப்பொறியாளர் பணிஅமைப்பு அவர்களிடம் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து ஜுன் திங்கள் இறுதிக்குள் ஊர்மாறுதல்கள் வழங்கிட வற்புறுத்திட உள்ளோம். வட்டமாறுதல்கோரி விண்ணப்பித்து மாறுதலுக்காக காத்திருப்போர் பட்டியல் ஒன்றினை மத்தியசங்கத்திற்கு அனுப்பிவைத்திட வட்டச்செயலாளர்களை வேண்டுகின்றோம்.

அதேபோல் கோட்டத்திற்குள்ளும், வட்டத்திற்குள்ளும் விருப்பமாறுதல் கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து 30-06-2019ம் நாளுக்குள் விருப்பமாறுதல் உத்திரவுகளை வழங்கிட செயற்பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப்பொறியாளர்களிடம் உரிய முறையீடுகளை செய்திட வட்டச்செயலாளர்களை வேண்டுகின்றோம்.

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள், உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்ட மகளிர் அணிச்செயலளார்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், உதவி மண்டலச்செயலாளர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.